## மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# கொரோனா விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள்!

## 2 நாட்கள் நடைபெறுகிறது!!

சென்னை, ஜன.21– மெட்ரோ ரெயில் மற்றும் நிலையங்களில் கொரோனாவிழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நாளையும் அடுத்து வரும் திங்கட்கிழமையும் என 2 நாட்கள் நடைபெற உள்ளது.

இது குறித்து மெட்ரோ ரெயில் நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொது மக்களுக்கும் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பனது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும்மெட்ரோரெயில்களில் கொரோனாவைரஸ்பரவல் தடுப்புதொடர்பானவிழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக சென்னைமெட்ரோரெயில் நிறுவனம் அகரம் கலைக் குழுவுடன் இணைந்து நாளை மாலை 7 மணி முதல் 7.50 மணி வரை விமானநிலையம்மெட்ரோ ரெயில் நிலைய நுழைவு வாயில்அருகேகொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கான நாடகம் நடைபெற உள்ளது.

பொம்மலாட்டம்

25–ம் தேதி திங்கள்கிழமைகாலை8.30 மணிமுதல்9.30மணிவரை வண்ணாரப்பேட்டை மெட்ரோவிலிருந்து விமானநிலையம்மெட்ரோ ஏ.ஜி.டி.எம்.எஸ்.வழியாக மற்றும் விமான நிலையம் மெட்ரோவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ செல்லும் மெட்ரோ ரெயிலில் பொம்மலாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

சென்னை மாநகரில் வசிக்கும்மெட்ரோரெயில் பயணிகள் மற்றும் பொது மக்கள் மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.